DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1 TIRUPPUR.

சி.சி.எண். 719/2022

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | | Prosecution | : அ.சா.2 |
| | | Defence | : |
| | | Court | : |
| Name | : ரகுவரன் | Caste | : |
| Father's Name | : நல்லுசாமி | Occupation | : உதவி ஆய்வாளர் |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accourdance with the provisions of act X of 1873 of the day of

**முதல்விசாரணை** **நாள் – 22.12.2022**

தொடங்கப்படும் நேரம் 12.05 பிற்பகல்

நான் தற்போது ஈரோடு இரயில்வே காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.04.2022 ஆம் தேதி 13.30 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது ஆந்திர மாநிலம், கடப்பா மாவட்டம் முத்துலிங்கம் என்பவர் பதிவு தபாலை பார்வையிட்டதில் அவர் கடந்த 17.04.2022 ல் இரயில் எண் 16382 பூனே எக்ஸ்பிரஸ் இரயிலில் கோச் நம்பர் S6 சீட் நெம்பர் 15 யில் பயணம் செய்து வந்தபோது திருப்பூர் ஈரோடு இரயிலில் தன்னுடைய ஒப்போ மொபைல் காணவில்லை என்று கொடுத்த புகாரின் அடிப்படையில் ஈரோடு இரயில்வே காவல் நிலைய குற்ற எண்.56/2022 சட்டப்பிரிவு 379 இதச கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல்

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

G BHARATHI PRABHA
Digitally signed by G BHARATHI PRABHA
Date: 2022.12.22 19:52:16 +0530

Judicial Magistrate No.I,
Tiruppur.

தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகும். அவர் புகாருடன் தனது பயணச்சீட்டையும் அனுப்பிவைத்திருந்தார். அந்த பயணச்சீட்டு **அ.சா.ஆ.3** ஆகும். அத்துடன் தனது செல்போனின் விபரத்தையும் குறிப்பிட்டு ஒரு சீட் அனுப்பியிருந்தார். அந்த செல்போன் விபரம் அடங்கிய சீட் **அ.சா.ஆ.4** ஆகும். மேற்படி முதல்கட்ட விசாரணையில் சம்பவ இடமானது திருப்பூர் இரயில்வே காவல் நிலைய எல்லைக்குட்பட்டு இருந்ததால் மேற்படி முதல் தகவல் அறிக்கையை உயர் அதிகாரி உத்தரவுப்படி திருப்பூர் இரயில்வே காவல் நிலையத்திற்கு அனுப்பிவைத்தேன். இது சம்பந்தமாக கடந்த 16.05.2022 திருப்பூர் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்பந்தமாக நான் எந்த விசாரணையும் மேற்பெகாள்ளவில்லை என்றும், முதல் தகவல்அறிக்கை மட்டுமே பதிவு செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரிதான். புகார்தாரரை நான் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரரை நான் போன் மூலமாகத்தான் விசாரித்தேன் என்றும் நேரடியாக விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான். புகார்தாரர் அவரது வாக்குமூலத்தில் அவரத போன் நம்பரையோ, ஐஎம்இஐ நம்பரையோ குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் விசாரித்தபோது அவர் மேல் பர்த்தில் படததிருந்தாரா அல்லது நடு பர்த்தில் படுத்திருந்தரா என்று குறிப்பிடவில்லை என்றும், அவர் சார்சினை வண்டியில் எந்த பகுதியில் போட்டடுயிருந்தார் என்றும் குறிப்படவில்லை என்றும், திருட்டு போனதாக சொல்லப்படும் செல்போனின் இரசீது கொடுத்ததாக கூறிவில்லை என்றும் சொன்னால் சரிதான். நான் தவறான புகாரினை பெற்று எந்தவித விசாரணையும் மேற்கொள்ளாமல் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி என்று என்னை விசாரித்தார்

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

G BHARATHI PRABHA
Digitally signed by G BHARATHI PRABHA
Date: 2022.12.22 19:52:27 +0530

Judicial Magistrate No.I,

Tiruppur.

என்றால் 16.05.2022 அன்று விசாரித்தார். நான் முதல் தகவல் அறிக்கையை மட்டும்தான் நான் புலன் விசாரணை அதிகாரிக்கு அனுப்பிவைத்தேன் என்று சொன்னால் முதல் தகவல் அறிக்கையுடன் அவரது பயணச்சீட்டினையும், செல்போனுக்கான விபர பட்டியலையும், புகார்தாரரின் வாக்குமூலத்தையும் இணைத்து அனுப்பினேன்.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

G BHARATHI PRABHA
Digitally signed by G BHARATHI PRABHA
Date: 2022.12.22 19:52:35 +0530

Judicial Magistrate No.I,

Tiruppur.